District Munsif Cum Judicial Magistrate Court, Radhapuram. 23.06.2026

**Judicial Form No-53**

**DEPOSITION OF WITNESS IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RADHAPURAM.**

**Case No. CC - 79/2019**

**Prosecution Witness –PW - 4**

| Name: | ஜேக்கப்ஜெபதுரை | Nationality: | இந்தியன் |
|---|---|---|---|
| Father's Name : | ஞானமுத்து | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village: | பொதிகைநகர் | Religion: | கிறிஸ்தவர் |
| Taluk: | பாளையங்கோட்டை | Age: | 54 |

**( Accused A1, A2, A3, A5,A6, A7, A8 Present A4, A9, A10 charge abated )**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2020.06.04.2026**

**<u>சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது</u>**

2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 23 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் தற்போது கூடன்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். காவல் நிலைய குற்ற எண்.67/2010 வழக்கின் உள்ள முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தரபெருமாள் மற்றும் புலன்விசாரணை செய்த உதவி ஆய்வாளர் செந்தில்குமார் ஆகியோர்கள் வேறு காவல்நிலையத்தில் பணி புரிவதால் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதாலும், அவர்கள் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 05.04.2010 ம் தேதி 21.30 மணிக்கு கூடன்குளம் சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது அடங்கார்குளத்தைச்

சேர்ந்த ஆறுமுகம் மகன் சிவகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்றுள்ளார். **புகார் மனு அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 67/2010 இதச சட்டப்பிரிவுகள் 147, 148, 452, 323, 324, 506(2) of IPC and 4 of TNPHW act சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து கனம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக உயர் அதிகாரியின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3) விசாரணை அதிகாரி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 05.04.2010 ம் தேதி 22.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அண்ணாதுரை, கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** பின்னர் எதிரிகளை தொடர்ந்து தேடி வந்த நிலையில் 2, 5, 6, 7 ஆகிய எதிரிகளை 09.04.2010 ஆம் தேதி 13.00 மணிக்கு காவல்கிணறு விலக்கின் அருகில் வைத்து காரணம் கூறி கைது செய்து மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி நிலையம் அழைத்து வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். மற்ற எதிரிகள் அனைவரும் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்று விட்டார்கள்.

5) பின்னர் சாட்சிகள் 1 முதல் 10 மற்றும் வழக்கு பதிவு செய்த பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6) பின்னர் காயம்பட்ட சாட்சிகள் சிவகுமார், ஆறுமுகம், அரிகிருஷ்ணன், கலைமகள் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனசேகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் சாதாரண காயம் என காயச்சான்றுகள் வழங்கியுள்ளார். **காயச்சான்றுகள் அ.சா.ஆ.6, 7, 8, 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(7) வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் 147, 148, 452, 323, 324, 506(2) of IPC and 4 of TNPHW act ஆக குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) நீங்கள் சொன்ன தேதியிலும், சொன்ன நேரத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வில்லை என்றாலும், வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை நேரில் விசாரிக்கவில்லை என்றாலும், இந்த விசாரணை ஒருதலைபட்சமானது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.23 17:46:24 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Radhapuram.